[25th March 1958

SRI K. VINAYAKAM : Do not the Government feel that the incidence of taxation per head in our State is a bit slightly higher?

MR. SPEAKER : Higher than what?

THE HON. SRI C. SUBRAMANIAM : We can only speak relatively with reference to comparable figures. Therefore when the hon. Member says 'higher', I do not know 'higher' with reference to what?

SRI S. NAGARAJA MONIGAR : மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில் வரிகள் அதிகமாக இருப்பதனுல், நம் ராஜ்யத்தில் வாழ்க்கைத் தரமும் மற்ற ராஜ்யங்களைவிட அதிகமாக இருக்கிறது என்று கொள்ள முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் எந்த விதமான முடிவுக்கும் வர முடியாது. ஆகையினுல் தான் இப்போது ஒவ்வொரு ராஜ்யத்திலும் சராசரி வருமானம் என்ன என்பதை நிர்ணயிக்க இப்போது ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : உற்பத்தி பெருகிக் கொண்டு வரும்போது வரிகள் குறைந்து கொண்டு தானே வர வேண்டும். சர்க்கார் இனிமேலாவது வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்களின் பொருளாதாரத் தத்துவமோ அல்லது நிதி தத்துவமோ எனக்குப் புரியவில்லை.

SRI T. KARIA GOUNDER : உற்பத்தி பெருகுவதாக அங்கத்தினர் அவர்கள் சொன்னுரே, அது என்ன என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா ?

MR. SPEAKER : இதைப்பற்றி கனம் அங்கத்தினரை கேட்க வேண்டுமே தவிர கனம் அமைச்சரை கேட்க முடியாது.

Assignment of poramboke lands to Harijans.

* 405 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(i) the extent of poramboke lands assigned to Harijans in 1955-56 and 1956–57 in the South Arcot district;

(ii) the Villupuram taluk; and

(iii) the Kalpathi village of Villupuram taluk?

THE HON. SRI M. A. MANICKAVELU :

1955–56	1956–57
ACS.	ACS.
(i) Nil.	127.08.
(ii) Nil.	Nil.
(iii) Nil.	Nil.

SRI A. GOVINDASAMY : 1955–56-ம் வருடத்தில் என் ஆதிதிராவிட மக்களுக்கு புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒதுக்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். அது 1956–57-ல் வந்து விட்டது.

25th March 1958]

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த புறம்போக்கு நிலங்களை ஒதுக்கும் விஷயமாக ஆங்காங்கு இருக்கின்ற பஞ்சாயத் போர்ட்டின் அனுமதி வேண்டுமென்று இருக்கிறபடியினால், இக்காலத்திற்கு அது ஏற்றபடி இருக்கிறதாக சொல்ல முடியாது. ஆகையால் ரெவன்யூ டிப்பார்ட்மெண்டே கொடுக்கலாம் என்று முடிவுசெய்ய சர்க்கார் பரிசீலிக்குமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : பஞ்சாயத் போர்டு சம்பந்தமாக அவர்கள் அனுபவத்தில் இருக்கின்ற நிலங்களை எடுக்கும்பொழுது அவர்களை யும் கலந்து ஆலோசித்து அவர்களுடைய அனுமதியையும் பெறவேண்டியது அவசியமாகிறது.

SRI A. GOVINDASAMY : எனக்கு வந்திருக்கின்ற கேள்வித்தாளில் கல்பட்டி என்பது ஆங்கிலத்தில் கல்பாதி என்றிருக்கிறது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் சொன்னதில் வேறு ஏதாவது மாறுதல் உண்டோ ? கல்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் ஒதுக்கியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் ஏற்பட்ட மாறுதல்தான். கிராமம் கல்பட்டுதான். அதில் சந்தேக மில்லை. மற்றபடியுள்ள விவரங்களுக்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை.

SRI M. JAGANNATHAN : விழுப்புரம் தாலூகாவில் கல்பட்டு கிரா மத்தில் ஹரிஜன மக்களும் மாஜி ராணுவத்தினரும் சில இடங்களில் விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது அவர்களை அந்த தரிசு நிலங் களிலிருந்து இந்த அரசாங்கத்தார் வெளியேற்றியிருக்கிறார்கள். அவர் களுக்கு அரசாங்கம் உடனடியாக வேறு தரிசு நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ? அவர்களை வெளியேற்றினதற்கு என்ன காரணம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர்களை வெளியேற்றினது என்ன காரணத்திற்காக என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. (டேங்க் பெட்டில்) ஏரிக்கரைகளிலும் ஆயக்கட்டு நிலங்களுக்கு விரோதமாக இருக்கக்கூடிய இடங்களிலும் இருக்கிறவர்களை வெளியேற்றத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் வெளியேற்றினவர்களுக்கு வேறு இடங் களில் நிலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

SRI K. B. S. MANI : இந்த ஹரிஜனங்களுக்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் நிலங்களை அவர்கள் சரியான விதத்தில் அனுபவிக்காமல் இருந்த போதிலும் ஏதோ ஒரு காரணத்திற்காக கிராம உத்தியோகஸ்தா களின் மனத்தாங்கல் காரணமாக இவ்விதம் கொடுக்கப்பட்ட நிலங்களை மாற்றுவதற்காக இந்த நிலங்கள் எல்லாம் மேய்ச்சல் நிலங்கள் என்றெல் லாம், இருபது, இருபத்திஐந்து வருடங்களுக்கு முன்புளள புத்தகங்களி லிருநது எடுததுசசொல்லி அதை மாற்றி வருகிறார்கள். ஆனால் இந்த நிலங்களில் அந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை செலவு செய்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் அவர்களுக்கு அரசாங்கம் தவக்கமன்னியில் கொடுக்க முன்வருமா என்பதை கேட்க விரும்பு கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : மேய்ச்சல் நிலங்கள், வாய்க் கால் ஏரிகள், புறம்போக்கு நிலங்கள் இவைகளை எல்லாம் அடமானம் செய்து கொடுப்பதற்கில்லை. அப்படி இல்லாத நிலங்களை அடமானம் செய்து கொண்டு வருகிறோம்.

Daily allowance to last grade servants.

* 406 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the action taken by the